**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# Depictions of Women's Lives in the Short Story Collection *Yevalin Irandam Mudivu*

**M. Maharajan,** Registration No.: 22113154021009, Tamil Research Scholar, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0000-7514-6299**
**Dr. P. Malar,** Assistant Professor of Tamil, S. T. Hindu College, Nagercoil, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734**
**DOI: 10.5281/zenodo.14752281**

## Abstract

*The short story writer Pavannan has realized the position of women in the social hierarchy and has composed his short stories to express it. He has created environments that suit the theme of his short stories. He has used characters from myths and epics to express his ideas. He has conveyed the thoughts that men generally have about women through the narrators. The author has understood the place of women in the social hierarchy over time and has expressed it in his short stories. Women are depicted in short stories as having a sense of motherhood, being deceived by men in love, and having a compassionate heart for men. The fact that family relationships do not support the development of women and do not respect their basic feelings and rights creates a tightness in their mentality. Through his short stories, Pavannan reveals that the social structure that provides equal rights and participation to both sexes will pave the way for a better future.*

**Keywords:** Mythology, Vasavaththa, Panchali, Damayanti, Sakunthala.

## References
[1] Anandhi, N. *Perungathai Moolamum Uraiyum*. Kaura Book store.
[2] Pavannan. *Evalin Irandavathu Mudivu*. Tamilini, 342 T.D.K. Road, Chennai – 14.
[3] Palayan, A.P. *Nalavenpa Moolamum Uraiyum*. Saradha Press. Rayapettai, Chennai.
[4] Prema, I. Dr. *Penniyam*. World Tamil Research Institute, Taramani, Chennai –113. 1994.
[5] https://ta.wikipedia.org/s/7e6 Accessed on 25 November 2024.
[6] https://ta.wikipedia.org/s/mtn Accessed on 25 November 2024.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# 'ஏவாளின் இரண்டாவது முடிவு' சிறுகதைத் தொகுப்பில் பெண்வாழ்க்கை குறித்த சித்தரிப்புகள்

**ம. மகராஜன்,** பதிவுஎண்: 22113154021009, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0000-7514-6299**
**முனைவர் பா. மலர்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734**
**DOI: 10.5281/zenodo.14752281**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிறுகதை ஆசிரியர் பாவண்ணன் பெண்கள் சமூக அடுக்கில் என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதை உணர்ந்து அதனை வெளிப்படுத்தும் விதமாக தம் சிறுகதைகளை புனைந்திருக்கிறார். தம் சிறுகதையின் கருவுக்கு ஏற்ற வகையில் சூழல்களை அமைத்திருக்கிறார். தொன்ம கதைகள், காப்பியங்கள் ஆகியவற்றின் கதாப்பாத்திரங்களை தன் கருத்துகளைக் கூற பயன்படுத்தியிருக்கிறார். ஆண்கள் பொதுவாக பெண்கள் குறித்து தம் மனதில் கொண்டிருக்கும் எண்ணங்களை கதைமாந்தர்கள் வழியாக உணர்த்தியிருக்கிறார். காலங்காலமாக பெண்கள் சமூக அடுக்கில் எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதை நன்குணர்ந்து தன் சிறுகதைகளில் ஆசிரியர் கூறியிருக்கின்றார். பெண்கள் தாய்மை உணர்வை கொண்டவர்களாக, அன்பு கொண்டு ஆண்களால் ஏமாற்றப்படுபவர்களாக, ஆண்களுக்காக மனம் இரங்கும் தன்மை கொண்டவர்களாக சிறுகதைகளில் காட்சிப்படுத்தப்படுகின்றனர். குடும்ப உறவுகள் பெண்களின் வளர்ச்சியில் ஆதரவு வழங்காமல் இருப்பதும் அவர்களுக்குரிய அடிப்படை உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளிக்காமல் இருப்பதும் அவர்களின் மனநிலையில் இறுக்கமான தன்மையை ஏற்படுத்திவிடுகிறது. சமூகக் கட்டமைப்பானது இருபாலினத்தவருக்கும் சமமான உரிமை மற்றும் பங்களிப்பை அளிப்பதே சிறப்பான எதிர்காலம் அமைய வழிஅமைக்கும் என்பதை பாவண்ணன் தம் சிறுகதைகளின் வழி வெளிப்படுத்துகிறார்.*

**குறிப்புச்சொற்கள்:** தொன்மக்கதைகள், வாசவதத்தை, பாஞ்சாலி, தமயந்தி, சாகுந்தலை

**முன்னுரை**

பாவண்ணனின் 'ஏவாளின் இரண்டாவது முடிவு' என்னும் சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் 11 சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் பெண்களை குறித்ததாகவே உள்ளது. புராணங்கள் துவங்கி காப்பியங்களில் நீட்சியடைந்து தற்கால எதார்த்த வாழ்வில் இடம்பெறும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது. அனைத்து சிறுகதைகளின் மைய ஓட்டமும் பெண்களாகவே அமைகிறார்கள். சமூகத்தின் சமநிலைக்கு ஆண்-பெண் என்ற இருவரின் பங்களிப்பும் அவசியம் என்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

**தெய்வமாக்கப்பட்ட பெண்**

தமிழ் சமூகத்தின் மரபார்ந்த தெய்வங்களை எடுத்துக்கொண்டால் அதில் ஆண் தெய்வங்களுக்கு நிகரானதாகவும் சில இடங்களில் ஆண் தெய்வங்களைவிட மேன்மையானதாகவும் பெண் தெய்வங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. பெண் தெய்வங்கள் அனைத்தும் மங்களத்தின் அடையாளமாகவும் புனிதத்தன்மை வாய்ந்ததாகவும் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த பெண் தெய்வங்களின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக கூறப்படும் கதைகளை நாம் கேட்டோம் என்றால் அதனுள் ஓர் முரண்பட்ட இயக்கம் இருப்பதை கண்டு கொள்ளலாம். தமிழ் நிலத்தில் எங்கும் சிறுதெய்வங்களாக இருக்கின்ற பெண் தெய்வங்கள் குறித்து அறிந்து கொள்ள முற்படும்போது அவற்றுள் பெரும்பான்மையானவை ஆண்களின் அடக்குமுறைகளுக்கும் அதிகாரங்களுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆட்பட்டவையாகவும் பிற்காலத்தில் அவை மேல்நிலையாக்கம் பெற்றவையாகவும் அமைந்திருப்பதை காணலாம்.

தொன்மக் கதைகளில் இடம்பெறுகின்ற சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னியின் மனைவி ரேணுகா தேவியார். இவர் பரசுராமரின் தாயாரும் ஆவார். சிறுதெய்வமாக்கப்பட்ட ரேணுகா தேவியை முதன்மை கதாபாத்திரமாகக் கொண்ட 'காற்றில்கரைந்துவரும்குரல்' என்னும் சிறுகதை இந்த தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது. தன்னுடைய இயல்பான நடத்தையால் கணவனின் தண்டனைக்கு ஆளான ஒரு பெண்ணின் மனநிலையை எடுத்துக் கூறுவதாக இக்கதை புனையப்பட்டிருக்கிறது. ஆற்றுநீரில் பிம்பமாக தெரிந்த கந்தர்வன் ஒருவனை ஒரு வினாடி நேரம் கூர்ந்து கவனித்ததற்காக தன்னுடைய கணவனால் விமர்சிக்கப்பட்டாள். கணவன் கட்டளையால் தன் மகனான பரசுராமன் கையால் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டார். பரசுராமனின் வேண்டுதலின்படியும் தன்னுடைய கணவன் ஜமத்தக்னியின் தவ வலிமை வழியும் மீண்டும் உயிர்பெற்றாள் என்பதை புராணங்கள் கூறுகின்றன.

புராணங்கள் வழி பார்த்தோமானால் இந்நிகழ்வுகள் அனைத்தும் சமநிலைப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றன. ஆனால் குற்றம் – விசாரணை –தண்டனை என்று கோணத்தில் இந்த செயல்களை நோக்க வேண்டும். தவறு செய்தவர்களுக்குக்கூட தன் தரப்பு விளக்கத்தை அளிக்க அவகாசம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் தன்னுடைய மனம், புத்தி, உடலால் எந்த ஒரு தவறும் செய்யாத போது எந்த விசாரணைக்கும் உட்படுத்தப்படாமலும் அவள் தரப்பு நியாயங்களைகூற அவகாசம் வழங்கப்படாமலும் நேரடியாக தண்டனைக்கு ஆளாகிறாள். அதுவும் தனக்கு எல்லாவுமாக இருப்பவராலேயே

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அந்த தண்டனை வழங்கப்படும்போது மனதில் ஏற்படுகின்ற வேதனையும் பயமும் விரக்தியும் தனக்கு எல்லா காலத்தும் அந்த நிகழ்வுகளை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் என்பதை தெய்வ கதாபாத்திரம் உணர்த்துகிறது.

“உன் தாயின் தலையை வெட்டி விடு” என்ற ஜமத்தக்னியின் வார்த்தைகளை அவளால் மறக்க முடியவில்லை. மனிதர்களின் இன்னல்களை தீர்த்து அவர்களின் உயர்வான வாழ்க்கைக்கு வழிகாட்டும் சக்தி வாய்ந்த தெய்வமாக அவள் உயர்நிலைக்குச் சென்றபின்பும்கூட அந்த குரல் அவளை கலவரப்படுத்திக்கொண்டே இருக்கிறது. தான் அமர்ந்திருக்கும் கருவறை சுவரில் அந்த குரலின் சத்தம் எதிரொலித்துக் கொண்டிருப்பதாகவும் அவள் எண்ணிக் கொள்கிறாள்.

இக்கதையில் இடம்பெறும் மற்றொரு கதாபாத்திரமான கௌரி தற்கால எதார்த்த வாழ்வின் பிரதிநிதியாகவே காட்சிப்படுத்தப்படுகிறாள். இரவில் கருவறையில் இருந்து வெளிவரும் அம்மன் பூ விற்கும் பெண்ணான கௌரியுடன் தினமும் பேசுகிறாள். அவள் மூலமாக நாட்டு நடப்புகளை அறிந்து கொள்கிறாள். குடிப்பழக்கத்திற்கு அடிமையான கணவனின் துன்புறுத்தலினால் அவனைவிட்டுத் தன்னிச்சையான சுயசார்பு வாழ்க்கை வாழும் பெண்ணாக கௌரி காட்டப்படுகிறார். இரவு வேளையில் இருவரும் சேர்ந்து நகர்உலா செல்லுகையில் அவர்கள் காணும் காட்சிகள் அனைத்தும் தற்கால வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்தியபடியே உள்ளன. கணவன் மனைவி இடையேயான பிரச்சனைக்கு தீர்வு காண பஞ்சாயத்து அமைப்பு ஆலமரம் அடியில் கூடுகிறது. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு கணவனுக்கு ஆதரவாக தீர்ப்பு கூறுகின்றனர். மனைவியின் நடத்தைகளை விமர்சனம் செய்கின்றனர். புராணங்களில் மட்டுமல்ல தற்காலத்திலும்கூட ஆண் பெண் இருவரின் உறவுகளில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சிறுகதை ஆசிரியர் தன்னுடைய கதை மாந்தர்களின் வழியே புலப்படுத்திக் காட்டுகிறார்.

**பெண்மையை ஏற்றுக்கொள்ளாத ஆண்**

‘குமாரவனம்’ என்ற சிறுகதையில் இடம்பெறும் முதன்மை கதாபாத்திரம் இளன். அவன் தன்னுடைய குதிரையில் காடுகள் வழியாக சென்று கொண்டிருக்கையில் வழி தவறி வேறொரு வனப்பகுதியான குமாரவனத்திற்கு வருகிறான். அந்த வனத்தில் எங்குமே அழகான பெண்கள் இருக்கிறார்கள். ஆண் ஒருவன்கூட இல்லை. அவன் அவர்களை பார்த்தபடியே செல்கிறான். பெண்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தனர். இவனுக்கு தாகம் மேலிடவே நீர் நிலையில் தண்ணீர் அருந்துகிறான். அங்கும் பெண்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அவன் அங்கிருக்கும் பெண் ஒருவளிடம் விசாரிக்கவே குமாரவனத்திற்குள் வந்தவர்கள் எவரும் திரும்பி செல்ல இயலாது எனக் கூறுகிறாள். குமாரவனத்திற்குள் இருக்கும் பெண்கள் அனைவருமே வழித்தவறி வந்தவர்களே என்கிறாள் அந்த பெண். இளன் நீரில் தன் உருவத்தை காணும் வேளையில் மிகவும் அதிர்ச்சியடைகிறான்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


அவன் முகம் பெண்முகமாக மாறிவிட்டது. குமாரவனத்தின் தலைவனான ருத்ரனைத் தவிர அனைவருமே பெண்கள்தான் என கூறுகிறாள் அந்த பெண். இளனின் உடலிலும் உடல் அசைவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை அவன் உணர்கிறான்.

குமாரவனத்திற்குள் நுழைந்த போது அங்கு தென்பட்ட பெண்களின் அழகில் களிப்புற்ற இளன்தான் பெண்ணாக மாறியதை ஏற்றுக்கொள்ள இயலாதவனாகவே உள்ளான். ஆணிற்குரிய பலம், உடல் வன்மை ஆகியவற்றை இழந்து பெண்ணிற்குரிய அழகு, இனிமை, மென்மை ஆகியவற்றை தான் பெற்றிருப்பதை எண்ணி மிகுந்த வருத்தம் அடைகிறான். பெண்களை விரும்பும் மனம் கொண்ட ஆண் ஒருவன் எப்போதும் தான் பெண்ணாக இருக்கவிரும்புவதில்லை என்ற எதார்த்தத்தை பாவண்ணன் இக்கதையின் வழி உணர்த்துகின்றார்.

**தன்னம்பிக்கை பெண்**

'நெருப்பு வளையங்கள்' என்னும் கதையில் இடம்பெறும் ராணி கதாபாத்திரம் தன்னம்பிக்கை கொண்ட பெண் கதாபாத்திரமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சர்க்கஸ் ஒன்றில் நெருப்பு வளையங்களைத் தாண்டும் சாகசம் செய்பவள் ராணி. அவள் தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் கணவனால் ஏமாற்றப்பட்டவள். எனினும் அதனை கடந்து தன்னுடைய சாகச செயல்பாடுகளினால் சர்க்கஸ் பார்வையாளர்களின் மனதை மகிழ்வித்துக் கொண்டிருப்பவள். தன் மனம் எவ்வளவு பாரமாக இருந்தாலும் உடலை இலகுவாக்கிக் கொண்டு வளையங்களைத் தாண்டி பிறரை மகிழ்வித்து தன் உள்ளத்தையும் இலகுவாக்கிக் கொள்கிறாள். புதிய சாகசங்களை அறிமுகப்படுத்துவதால் ராணி செய்து கொண்டிருந்த நெருப்பு வளைய விளையாட்டை நிறுத்திக்கொள்ள சர்க்கஸ் முதலாளி முடிவு செய்தார். தன்னுடைய இறுதி சாகச விளையாட்டு விளையாடுகையில் பார்வையாளர் கூட்டத்தில் முதலாளி அருகில் அமர்ந்திருக்கும் தன் கணவனைப் பார்க்கிறாள். அதுவரை சிரித்த முகத்தோடும் உற்சாகத்தோடும் சாகசம் செய்து கொண்டிருந்தவள் அவன் கண்கள் தன்னை ஊடுருவதை அறிந்ததும் மனம் நொந்து போனாள். அவள் உற்சாகமும் குறைந்தது. எனினும் தான் எவரைக் கண்டும் பயப்படக்கூடாது எந்த துன்புறுத்துதலுக்கும் உட்படக்கூடாது என தனக்குத்தானே நம்பிக்கை கற்பித்துக்கொண்டு நெருப்பு வளையங்களைத் தாண்டி சாகசம் செய்தாள். பார்வையாளர்களின் கைதட்டலும் ஏகோபித்த பாராட்டும் ராணிக்கு ஊக்கத்தையும் தன்னம்பிக்கையும் அளித்தது. ராணியின் நிலையையும் அவள் திறமையும் உணர்ந்த சர்க்கஸ் முதலாளி அவள் சாகச விளையாட்டை தொடர்ந்து நிகழ்த்த முடிவு செய்து அவளிடம் பேசினார். ஆனால் தன் மீதும் தன்னுடைய திறமை மீதும் நம்பிக்கை உள்ளது; எவரும் தன்னிடத்தில் இரக்கம்காட்ட தேவையில்லை. அதனை தான் விரும்புவதில்லை எனக்கூறி சர்க்கஸை விட்டு வெளியேறுகிறாள்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

ஒருவர் தன்னுடைய கடந்த காலத்தில் எவ்வளவு துன்பங்களையும் வேதனைகளையும் கண்டிருந்தாலும் அதனை கடந்து செல்ல முயற்சி செய்ய வேண்டும். அவற்றை மறந்து புதிய பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது முந்தைய கால நினைவுகளும் நபர்களும் நம்முன் வரும்வேளையில் அதனை கடந்து செல்ல கூரிய உத்வேகத்துடன் இருக்க வேண்டும். அவற்றினால் நம்முடைய பயணத்தில் மாற்றமோ வேகக்குறைப்போ வந்துவிடாதபடி நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ராணி கதாபாத்திரம் நமக்கு உரைக்கின்றது.

**தாய்மை குணம் கொண்டவள் பெண்**

மகாபாரதத்தின் பாஞ்சாலியை மையமாகக் கொண்ட அவளுடைய தாய் மனதை வெளிப்படுத்திக் காட்டுகின்ற சிறுகதை 'அன்னை'. குருசேத்திரப் போரின் இறுதி நாளில் அஸ்வத்தாமன் தன்னுடைய தோழன் துரியோதனன் மறைவுக்கு பழிவாங்க எண்ணினான். பாசறையில் தூங்கிக் கொண்டிருக்கும் பாண்டவர்களை போர் விதிமுறைகளை மீறி இரவு நேரத்தில் தாக்கிக் கொலைசெய்ய துணிந்தான். பாசறை கூடாரம் ஒன்றில் நுழைந்து ஐந்து பேரையும் தலையை வெட்டிக் கொன்றான். ஆனால் இறந்து போனவர்கள் பாண்டவர்கள் அல்லர். அவர்களின் ஐந்து புதல்வர்கள். தன்னுடைய மகன்களை இழந்த அன்னையான பாஞ்சாலியின் புலம்பல்கள், ஆவேசங்கள், பாச உணர்வுகள் ஆகியவற்றை இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

மகன்களின் மரணத்தை அறிந்தவள் அவர்களின் உயிரற்ற உடல்களைத் தழுவி அழுகிறாள். தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்த முடியாமல் திணறுகிறாள். திடீரென்று ஆவேசம் கொண்டவளாக அரற்றுகிறாள். சுற்றியிருந்தவர்கள் எவராலும் அவளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அர்ஜுனன் அஸ்வத்தாமனைப் பிடித்து வந்து பாஞ்சாலி முன் நிறுத்துகிறான். அவன் தாக்கப்பட்டவனாகையால் அவன் உடலில் இருந்தும், இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அஸ்வத்தாமன் உயிரைப் பறிக்க பலர் காத்துக்கொண்டிருக்கையில் பாஞ்சாலி அவனை மன்னித்து விடுவது அனைவருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. மகன்களை இழந்து தாயாக தான் படும் இன்னல்களை இன்னொரு தாய் அனுபவிக்க வேண்டாம் என்கிறாள். இத்தகையதொரு கடினமான சூழ்நிலையில் எவரும் மனம் தடுமாறுவதும் ஆவேசப்படுவதும் நிகழ்வது உண்டு. ஆனால் பாஞ்சாலி தன்னுடைய இடத்தில் இன்னொரு அன்னையை நிறுத்தி அவளுக்கு ஏற்படும் துன்பத்தை நினைத்துப் பார்க்கிறாள். இன்னொரு தாய்க்கு தான் தாயாக மாறுகிறாள். தாய்மை எனும் உயர்ந்த தன்மையை மகாபாரத பாஞ்சாலி கதாபாத்திரம் வழியாக நமக்கு கூறிச் செல்கிறார் ஆசிரியர் பாவண்ணன்.

**இன்னல்களுக்கு ஆட்படும் பெண்**

தன்னுடைய சிறு வயதிலிருந்து பல்வேறு ஒடுக்குமுறைகளையும் ஏளனங்களையும் சந்தித்துக்கொண்ட பெண் தன்னுடைய மனதிடத்தாலும் தன்னம்பிக்கையாலும் கல்வி பயின்று

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அரசின் விமானப்படையில் வேலை பெற்றுவிடுகிறாள். எப்பொழுதும் புன்னகையுடனும் நிமிர்ந்த நடையுடனும் இருக்கும் பரிமளாதேவி தன் குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகளால் தன்னையே இழந்து விடுகிறார். அந்தப் பெண்ணின் வாழ்வைப் பற்றி கூறுவதாக 'அஞ்சலி' எனும் சிறுகதை அமைகிறது. வீட்டின் வெளியேயான புற வாழ்வில் வெற்றிபெற்ற பரிமளா தேவியால் வீட்டின் உறுப்பினர்களைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அவர்களும் பரிமளா தேவியை பற்றி எண்ணிப்பார்க்கவும் இல்லை. தன்னுடைய கணவனிடம் இருந்து எந்த ஒரு ஆதரவையும் அவர் பெற்றதில்லை. தன் இரு மகன்களும் காதல், போதை ஆகியவற்றில் தங்களை இழந்து விடுகின்றனர். அவர்கள் பற்றிய எண்ணங்கள் பரிமளா தேவியின் உடலில் இருதய நோய் ஏற்பட காரணம் ஆகிறது. அதுமட்டுமில்லாமல் கீழே விழுந்து நடக்க இயலாதவராகவும் இருந்தார். மருத்துவர்கள் ஓய்வெடுக்க அறிவுறுத்தியும் கேட்காமல் தன் அலுவல் வேலைகளை கவனித்து வந்தவர், மருத்துவமனையில் பரிசோதனைக்கு செல்லுகையில் இறந்து விடுகிறார்.

தன்னுடைய வாழ்வில் வெற்றிபெற வேண்டும் சுயத்துடன் வாழ வேண்டும் என்று ஓடிக்கொண்டிருந்தவருக்கு அவர் குடும்பமே தடையாக அமைந்தது. ஒருவர் குடும்பச் சூழ்நிலையும் அலுவலகச் சூழலும் எவ்வாறு இருந்தாலும் அதனை சமநிலையில் வைத்திருக்க முயல வேண்டும். இரண்டும் தராசின் இருபக்கம் போன்றது. ஒன்று உயர்ந்தால் மற்றொன்று தாழ்வு கொள்ளும். வேலை, குடும்பம் இரண்டிலும் தான் ஒரு அங்கத்தினர் என்பததை அறிந்து இரண்டின் கடமைகளையும் குறை இல்லாது செய்ய தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பரிமளாதேவி கதாபாத்திரம் தான் வேலை செய்யும் இடத்தில் வெற்றி பெற்றாலும் தன் குடும்ப கடமைகளில் தோல்வி அடைந்தார். இதனை மற்றுமொரு பார்வையில் அணுகினோம் என்றால் ஒரு பெண் உயர்நிலைக்குச் செல்லும் போது அவளுக்கு துணையாக இருக்க வேண்டிய ஆண் அவளை உதாசீனப்படுத்துவதும் அவளை துன்பத்திற்கு உள்ளாக்குவதும் நிகழ்ந்தேறுகிறது. வெற்றி பெற்றதற்கு அவருடைய தன்னம்பிக்கை, சுயஉழைப்பு, கல்வி காரணமாக இருந்தாலும் அவருடைய உடல் பலவீனத்திற்கு மனவேதனைக்கு இறப்பிற்கு காரணமானவர்கள் அவருடைய கணவன் மற்றும் மகன்கள் ஆவர்.

**ஆண்களால் புரிந்து கொள்ளப்படாத பெண்**

கடல் நீரும் ஆற்று நீரும் ஒன்று கலக்கும் இடமான கழிமுகம் என்பதை சிறுகதை தலைப்பாகக் கொண்ட கதை சிவபாலன் எனும் ஆணின் இரட்டை எண்ணங்கள் ஒன்று கலந்து குழப்பமானதை காட்டுவதாக உள்ளது. தன்னுடைய மனைவி ருக்மணியிடம் விவாகரத்து பெற்ற சிவபாலன் தனிமையில் வசிக்கிறார். அவர்கள் குழந்தை அபி ருக்மணியிடம் வளருகின்றது. தன் குழந்தையை மாதம் ஒரு முறை சந்தித்துக் கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது. அதன்படி குறிப்பிட்ட ஒரு நாளில் தன் குழந்தையைச் சந்தித்துக் கொள்ள

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சிவபாலன் ஆர்வமுடன் காத்திருந்தான். தான் தங்கியிருந்த விடுதியின் வெளியே தன் மனைவி மற்றும் மகனுக்காக காத்திருக்கையில் அவன் மனதில் கலக்கம் தோன்றுகிறது. தன் மனைவியின் நிலையை எண்ணி வருத்தம் கொள்கிறான். அவள் வேலை மற்றும் குழந்தை வளர்ப்பில் தனியாக துன்பப்படுகிறாள் என அவள் மீதுபரிவு கொள்கிறான். தான் தன்னுடைய மனைவியை விவாகரத்து செய்தது தவறான செயல்தானோ என்று தன்னைத்தானே குற்றம் சொல்லிக் கொள்கிறான். கடற்கரையில் சென்று அங்கு குவிந்திருந்த மக்கள் கூட்டத்தில் இடையே குழந்தைகளைக் கண்டதும் சிவபாலனுக்கு தன் மகன் மீதான பாசமும் அவனை காணாது தவித்த தவிப்பும் மேலோங்குகிறது. அவர்களுடன் தான் மீண்டும் சேர்ந்து வாழும் தன் விருப்பத்தை தன் மனைவியிடம் கூற வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறான்.

சந்திப்பு நிகழ்வதற்கு குறிப்பிடப்பட்டிருந்த நேரம் வந்தது. ஆனால் அவர்கள் இருவரும் வரவில்லை என்றதும் சிவபாலன் தன் மனைவி மீது கொண்டிருந்த காழ்ப்பு மனதில் இருந்து வெளிவருகின்றது. அதுவரையில் தன் மனைவி மீது பாசமும் பரிவும் கொண்டிருந்தவன் திடீரென அதற்கு நேர்எதிரான நிலைப்பாட்டைக் கொள்கிறான். அவள் தன்னை பழிவாங்குவதாகவும் தன் குழந்தையை தான் சந்திக்கக்கூடாது என எண்ணுவதாகவும் மீண்டும் மீண்டும் மனதில் பதிய வைத்துக் கொள்கிறான். மழை பொழிந்து கொண்டிருந்த மாலை வேளையில் ஆட்டோவில் தனியாக வந்திறங்கிய ருக்மணியை கண்டதும் அவனுடைய கோபம், காழ்ப்பு, அவநம்பிக்கை எல்லாம் அவள் மேலே வந்திறங்கியது. குழந்தைக்கு அடிபட்டதால் மருத்துவமனை சென்று வருவதாக அவள் கூறியும் அவன் அதனை நம்பமறுத்து விட்டான். அவள் தன் நிலையை எவ்வளவு எடுத்துக்கூறியும் சிவபாலன் அதனை ஏற்கவில்லை. அவள் திரும்பிச் செல்கையில் அவள் துணியில் இருந்த இரத்தத்தைக் கண்டதும் அது உண்மைதானோ என்று அவனுக்குத் தோன்றியது என்றாலும் அதனை அவளிடம் வெளிப்படுத்தவில்லை சிவபாலன்.

சிவபாலன் ருக்மணி இருவரும் விவாகரத்து பெற்றவர்கள் என்று குறிப்பிடும் ஆசிரியர் அதற்கான காரணத்தை இக்கதையில் குறிப்பிடவில்லை. அதனை கதை ஓட்டத்தின் மூலம் நாம் புரிந்து கொள்ள முடியும். தன் மனைவி மற்றும் குழந்தையை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும் அவர்கள் மீது நீங்கா அன்பு கொள்ள வேண்டும் என்று நினைக்கும் ஆண் மனம் தன் மனைவியான பெண்ணின் மனதிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவள் கால தாமதமாக வந்ததும் அதற்காக பல்வேறு காரணங்களை ஆண்மனம் தானாகவே வருவித்துக் கொள்கிறது. அந்த பெண்ணின் சூழ்நிலையை மன உணர்வை அவன் புரிந்து கொள்ள முயலவில்லை. அவன் தவறான எண்ணம் கொண்டவள் என்று முடிவுக்கு வந்தவன் அவள் ஆடையில் இருந்த இரத்தக் கறையைக் கண்டதும் அவளிடம் பேச முயன்றிருக்கலாம். அவள் சூழ்நிலையை தான் புரிந்து கொண்டேன் என்று அவளிடம் கூறி இருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. தன் ஆணவத்தைவிட்டு இறங்கி சென்று அவளிடம் பேச அவன் முன்வரவில்லை. தான்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விரும்பிய குடும்பம் தனக்கு கிடைக்க இருந்த ஒரு நல்வாய்ப்பைத் தன்னுடைய விரக்தி உணர்வு, ஆணவ மனத்தால் வீணடித்துக் கொண்டான் சிவபாலன்.

**குழந்தை பிறப்பும் சமூக ஒழுங்கமைவும்**

'ஏவாளின் இரண்டாவது முடிவு' என்னும் சிறுகதை சிசுக்கொலையை மையமாகக் கொண்டு பழங்கால புராண நிகழ்வை தற்கால நடப்புகளோடு ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட புனைவாகும். ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு குழந்தை பிறப்பு ஏற்படவில்லை. அதற்கான காரணத்தை அறிய ராஜ் என்பவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படவே அவர் தன்னுடைய தேடலில் விளைவாக அதனைக் கண்டடைகிறார்.

துஷ்யந்தராஜா - சாகுந்தலை இடையேயான காதலின் விளைவாக சாகுந்தலை வயிற்றில் கரு ஒன்று உருவாகின்றது. குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் வருவதாக சொல்லிச்சென்ற துஷ்யந்தன் திரும்பி வரவில்லை. எனவே சாகுந்தலை வயிற்றுக் கருவின் பிறப்பைத் தாமதப்படுத்த அவள் தோழியான காட்டுப்பெண் மந்திரம் ஒன்றைக் கூறுகின்றாள். அவளுடைய மந்திர வார்த்தைகள் காற்றில் அலைந்துக் கொண்டிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்களின் செவிகளில் அது ஒலிக்கவே அவர்களும் அதனை என்னவென்று அறியாது முணுமுணுக்கினர். அத்தருணத்தில் இருந்து அந்நாட்டில் குழந்தை பிறப்பு ஏற்படவில்லை. திடீரென தோன்றிய மந்திர வார்த்தைகள் எங்கிருந்து துவங்கியிருக்கும் என்று தேடி ராஜ் அலைகிறான். இறுதியில் சாகுந்தலைக்கு உதவிய காட்டுப் பெண்களின் வழிதோன்றல்களின் உதடுகளில் இருந்தே அந்த வார்த்தைகள் தோன்றியிருக்கும் என்பதை கண்டறிந்து அவர்களை தேடி செல்கிறான். அவர்களை சந்தித்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையில் ராஜ் செல்லவே காட்டுப்பெண்கள் வாழ்ந்திருந்த காடு தீப்பற்றி எரிந்து அனைவரும் இறந்து போகின்றனர்.

முற்காலத்தில் செய்த சிறு தவறுகூட வரலாற்றை மாற்றும் தன்மை கொண்டதுதான். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு புதிய தலைமுறை மனிதர்கள் தேவை. அப்போதுதான் அச்சமூகத்தின் செயல்பாடுகள் எல்லாம் சீரானதாக இருக்கும். குழந்தை பிறப்பு என்பது சமூகத்தில் இன்றியாமையாது. அது குடும்பம் எனும் நிறுவனத்தின் முழுமைக்கும் தேவையானதாகும். எதிர்கால தலைமுறைகள் இல்லா சமூகம் காலப்போக்கில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள இயலாமல் அழிந்து போகும் தன்மையுடையதாகும். சிசுக்கொலையின் விளைவு எதிர்காலத்தில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இக்கதை வெளிப்படுத்திக்காட்டுகிறது.

**உரிமை மறுக்கப்பட்ட பெண்**

ஆண் பெண் என்ற இரண்டு குழந்தைகளுக்கும் சமமான உரிமைகளையும் மதிப்பினையும் கொடுக்க வேண்டும் என்ற கருத்து இக்காலத்தில் பரவலாக பேசப்படுகிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இதன் காரணமாக எல்லா துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளனர். இரண்டு தலைமுறைகளுக்கு முன்பிருந்த பெண்களைவிட தற்கால பெண்கள் பல வகைகளில் முன்னேற்றம் கொண்டவர்களாக விளங்கிவருகின்றனர். சென்ற தலைமுறையில் ஆண் குழந்தைக்கு கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் பெண் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனை மையக் கருவாகக்கொண்டு உருவாக்கப்பட்ட சிறுகதை ‘காலணி’.

குடும்பத்தில் தம்பிக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகள் அவன் அக்காவுக்கு வழங்கப்படவில்லை. தம்பிக்கு காலணி வாங்கிக் கொடுக்கும் தந்தை அக்காவான பெண் குழந்தைக்கு வாங்கிக் கொடுக்க மறுக்கிறார். வெயில் பாதைகளிலும் முள் வழியிலும் வெற்றுக்கால்களுடன் நடந்து நடந்து வாழ்க்கை பயணத்தில் சென்று கொண்டிருக்கிறாள். திருமணம் செய்துகொண்ட பிறகு முதன்முதலாக காலணி அணிகிறாள். தான் பிறந்த இடத்திற்கு நேர்மாறான பருவ அமைப்புடைய குளிர்ச்சியான இடத்தில் கணவனோடு வாழ்கிறாள். குளிரின் தாக்கத்தினால் கால்களில் பாதிப்பு ஏற்படவே வீட்டிற்குள்ளும் செருப்பு அணிந்தபடியே இருக்கிறாள். மாமனார் அவள் தம்மை அவமதிப்பதாக எண்ணிக்கொண்டு அவள் கால்களை துணி தேய்ப்புப்பெட்டியால் காயப்படுத்துகிறார். அவளும் காயத்தால் வேதனைப்பட்டு அதனை ஆற்ற இயலாது இறுதியில் இறந்து போகின்றாள்.

மனிதனுக்குரிய அடிப்படை ஆசைகள், தேவைகளைக்கூட அனுபவிக்க பெற்றுக்கொள்ள உரிமை மறுக்கப்பட்டவர்களாக பெண்கள் இருந்திருக்கின்றனர். பெற்றோர் வீட்டிலும் தான் திருமணம் செய்துகொண்ட கணவன் வீட்டிலும் துன்பங்களோடு வாழ்பவர்களை எண்ணிப்பார்ப்பதற்கு இக்கதை தூண்டுகின்றது. சமூகத்தில் பெண்ணும் ஆணும் சமம் என சட்டங்கள் வரையறை செய்தாலும் குடும்பத்தின் வலைப்பின்னல்களை சட்டங்கள் எதுவும் செய்ததில்லை. இதனை அன்றாட வாழ்வில் பல நிகழ்வுகளில் வழியே நாம் அறிந்து கொள்ளலாம்.

**பெண் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத சமூகம்**

நளன் – தமயந்தி கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறுகதை ‘முற்றுகை’. சுயம்வரம் எனும் நிகழ்வின்போது அதற்கு ஆட்படும் பெண்ணின் உணர்வுகளையும் அவள் எதிர்பார்ப்புகளையும் அவள் கட்டுப்பாடுகளையும் வெளிப்படுத்திக்காட்டுவதாக இச்சிறுகதை அமைகின்றது. தன்னை திருமணம் செய்துகொள்ள விருப்பம் கொண்டு வானுலக தேவர்கள் மனித உரு கொண்டு வந்திருப்பதை தமயந்தி அறிந்து அக்கூட்டத்தில் இருக்கும் நளனை அடையாளம் கண்டு அவனுக்கு மாலை சூட்டுகிறாள். இது நளன் தமயந்தி கதையில் சுயம்வர நிகழ்வின் பொதுவான கருத்துகள். ஆனால் முற்றுகை கதையில் அதன் ஆசிரியர் பாவண்ணன் சுயம்வரத்தின்போது தமயந்தி என்னென்ன உளச்சிக்கல்களை எதிர்கொள்கிறாள் என்பதை எடுத்துக் கூறுகிறார். தான் விரும்பும் ஒருவனை

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

தன்னை விரும்பும் ஒருவனை திருமணம் செய்துகொள்ள எவருடைய ஒப்புதல் எல்லாம் தேவைப்படுகிறது என்ற கேள்வி தமயந்தி மனதில் எழுகிறது. கூட்டத்தில் இருக்கும் நளனை முதலிலேயே அவள் கண்டு கொண்டாலும் அவள் முன்னே நின்று கொண்டிருக்கும் பிற ஆண்களைது தாண்டிதான் அவள் நளனைப் பார்க்கமுடியும். ஒவ்வொருவர் முன்பாக தான்நின்று பிறகு அவரை கடந்து மற்றவர் முன்னிற்கையில் அவள் மனம் மிகவும் குறுகுகிறது. தன்னை உயிரற்ற பொம்மைபோல காட்சிப்படுத்தும் நிகழ்வை விரும்பாதவளாக உள்ளாள் தமயந்தி. ஆனால் அந்த எண்ணத்தை சபையோர் முன்னிலையில் வெளிப்படுத்த இயலாதவளாக இருக்கிறாள்.

தனது கணவனைத்தவிர வேறு எந்த ஆணையும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூடாது எனும் நெறிமுறை இருக்கும் சமூகத்தில் ஒவ்வொரு ஆணின் முகத்தையும் ஏறிட்டுப்பார்த்து சம்மதம் சொல்லும் நடைமுறையை தமயந்தி வெறுக்கிறாள். தன் மனம் கணவனாக ஏற்றுக்கொண்ட நளனைத்தவிர வேறு எவரையும் பார்க்ககூடாது என்ற எண்ணம் கொண்ட தமயந்தி நளன் அருகில் சென்று அவனுக்கு மாலை அணிவித்து அவன் முகம் பார்க்கிறாள். ஆனால் சுயம்வரத்தில் பங்கு கொண்டவர்கள் தமயந்தி தங்களை காணாது நளனைப் பார்த்ததால் மட்டுமே அவன் கழுத்தில் மாலை அணிவித்தாள் என்றும் அவள் தங்களை பார்க்காதது பெருந்தவறு என்றும் குற்றம் கூறுகின்றனர். சமூகம் கட்டமைத்த நெறிமுறைகளின்படி நடந்து கொண்டாலும் தமயந்தி என்னும் பெண் ஆணின் பார்வையில் எண்ணத்தில் தவறானவளாகவே கருதப்படுகிறாள். சமூகத்தின் கருத்துக்கள், நடைமுறைகள், நெறிமுறைகள் பெண்ணின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தை அவள் மனதில் ஏற்படுத்தும் ஆற்றா வருத்தத்தை நளன் –தமயந்தி சுயம்வர நிகழ்வு வழியே பாவண்ணன் எடுத்துக் கூறுகிறார்.

**அன்பால் ஏமாற்றப்படும் பெண்**

'வாசவதத்தை' என்னும் சிறுகதையும் பெண் மனதை மையக் கருவாகக் கொண்டது. பெருங்கதை காப்பியத்தின் தலைவன் உதயணன். அவன் தன்னுடைய யாழ் வாசிப்புத் திறமையைக் கொண்டு வாசவதத்தையை காதலில் வென்று திருமணம் செய்து கொண்டான். அதன்பிறகு அவன் வெவ்வேறு காலங்களில் பதுமாவதி, மானனீகை, விரிச்சிகை ஆகிய பெண்களையும் திருமணம் செய்துகொண்டு இறுதியாக தன்னுடைய நாட்டையும் திருமண உறவுகளையும் துறந்து துறவு கோலம் ஏற்கிறான். சீவகசிந்தாமணி போலவே பெருங்கதையும் உலக நிலையாமையை வலியுறுத்தக்கூடியதாகும். உதயணனின் மனைவியான வாசவதத்தை அரண்மனையில் தனித்திருக்கிறாள். தன்னுடைய காதல் கணவன் ஏற்கனவே இரண்டு பெண்களைத் திருமணம் செய்துவிட்டான். அவர்களும் அரண்மனையில் இருக்க வேறொரு பெண்ணின் மீது காதல்கொண்டு அவளையும் அவன் திருமணம் செய்ய விரும்புகிறான் என்பதை அறிகிறாள். தான் அவன் மீது மட்டுமே விருப்பமும் காதலும் கொண்டிருக்க அவன் அவனது காதலை மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிப்பதை வாசவதத்தை விரும்பவில்லை.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அவனை காணும் பொழுது அதனைப்பற்றி அவனிடம் பேச வேண்டும் என்று எண்ணுகிறாள். ஆனால் அவன் வாசவதத்தையை சந்திக்கும்போது அவள் பதில்பேச முடியாதவாறு அன்பு பொழிகிறான். அரண்மனை அருகில் இருக்கும் குளத்தில் இரவு வேளையில் வாசவதத்தை தனித்திருக்க உதயணன் வருகிறான். அவன் தன் திருமணத்திற்கு ஒப்புதல்பெறவே தன்னை சந்திக்க வருகிறான் என்பதை வாசவதத்தை உணர்ந்திருந்தாள். அவன் எவ்வளவு நியாயம் சொன்னாலும் தான் ஒப்புக்கொள்ள போவதில்லை என்று முடிவுடன் இருந்தாள். வாசவதத்தை அருகில் வந்தவன் அவள் அழகை புகழ்ந்து பேசுகிறான். அவளை பலவாறாக கொஞ்சுகிறான். அன்பிற்காக ஏங்கி இருக்கும் குழந்தைபோல நடந்து கொள்கிறான். அவர்களுக்குள் நிகழ்ந்த ஊடல்களுக்குபின் மற்ற பெண்களோடு புதிதாய் வரவிருக்கும் பெண்ணும் அரண்மனையில் தங்கிக் கொள்வதால் தனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று உதயணனிடம் கூறிவிடுகிறாள். வாசவதத்தையின் ஒப்புதலைபெற்ற உதயணன் மனமகிழ்வுடன் திரும்பிச் செல்கிறான். உதயணனை காணும் முன்புவரை மிகவும் உறுதியான மனத்துடன் இருந்த வாசவதத்தை அவனுடைய சொற்கள் நடத்தைகளைக் கண்டு உள்ளம் இறங்குகிறாள். அவன் தவறு செய்பவனாக இருந்தாலும் தன்னுடைய அன்புக்கு துரோகம் செய்பவனாக இருந்தாலும் அவனை மன்னிக்கும் மனநிலைக்கு வந்துவிடுகிறாள். அவனது ஒவ்வொரு திருமணம் குறித்த தகவல் வருவதும் தான் மனத்திடத்துடன் அவனை மறுக்க முயல்வதும் இறுதியில் அவன் அவளை வென்று செல்வதுமே நடந்தேறுகிறது. ஒவ்வொரு முறையும் தோல்வி கண்டவள் இம்முறையிலும் வெற்றிபெற இயலவில்லை. பெண்மனம் இலகுவாக இருப்பதும் தவறை மன்னிக்கும் தன்மையை அதிகமாக பெற்றிருப்பதும் அன்புக்கு இறங்கும் தன்மை உடையதாக இருப்பதும் அவர்களின் ஏமாற்றத்திற்கு காரணமாக அமைவதாக இச்சிறுகதை நமக்கு உணர்த்துகிறது.

**தடுமாற்ற மனதால் ஏமாறும் பெண்**

'வாக்குமூலம்' என்ற சிறுகதை சமகால நிகழ்வுகளோடு புனையப்பட்டுள்ளது. கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பெண்ணை குறித்ததாக இக்கதை அமைகிறது. கொலை வழக்கை விசாரிக்கும் அதிகாரியான சங்கர் என்பவரும் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பெண்ணும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இக்கதையில் சங்கரின் குரல் எங்கும் ஒலிக்கவில்லை. பெண் தன் தரப்பு விளக்கங்களைக் கொடுப்பதாகவே இக்கதை அமைகிறது. கல்லூரியில் படிக்கும் காலங்களில் மிகவும் சுறுசுறுப்பாக அனைவரையும் கவரக்கூடிய பெண்ணாக இருந்தவள் தற்போது கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவளாக காட்சிப்படுத்தப்படுகிறாள். செல்வந்தர் ஒருவனை திருமணம் செய்துகொண்டவள் தன் கணவன் தொழில் நிமித்தமாக அடிக்கடி வெளியூருக்கு செல்கையில் அவன் பிரிவை தாங்கமுடியாதவளாக இருக்கிறாள். பெரும்பாலும் தன் வீட்டில் தனிமையிலேயே இருக்கின்றாள். தன் கணவனின் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரிடம் அவள் விருப்பம்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கொண்டு அவனுக்கு பணபலன்களைக் கொடுக்கிறாள். தன் கணவன் மாரடைப்பு நோயில் இறந்ததும் அவள் அவனை திருமணம் செய்து கொள்ள நினைக்கிறாள். ஆனால் அவன் அவளை விரும்பாமல் அவளிடம் இருந்த பணத்தை மட்டுமே விரும்பியிருக்கிறான். அவர்களுக்கு இடையே நிகழ்ந்த வாக்குவாதம் முற்றுகையில் அவள் தள்ளிவிட அவன் இறக்கிறான். பெண் ஒருவர் மனது சிறிது தடுமாற்றம் அடையும்போது அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள சில ஆண்கள் எண்ணுகின்றனர். வாழ்வின் சில தவறுகள் எப்பொழுதும் சரிசெய்ய முடியாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. சமூகம் கட்டமைத்த குடும்பம் என்ற அமைப்புக்குள் வாழும்பொழுது அதன் தன்மைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். அந்தப் பெண் தன் கணவனை விடுத்து வேறு ஆணிடம் விருப்பம் கொண்டது குடும்ப அமைப்பை உருகுலைக்கிறது. தன் கணவன் இறந்த பின்பு திருமணம் செய்ய நினைத்தபோது அவன் தன் மீது உண்மை அன்பைக் கொண்டிருக்கவில்லை என அறிகிறாள். எந்த ஒரு ஆதரவும் இல்லாத நிலையில் அவன் மீதான கோபத்தை வெளிப்படுத்துகிறாள். எதேச்சையாக அவன் இறந்துவிடவே அவள் வாழ்வு இனி என்னவாகும் என்ற கேள்வியே இறுதியில் எஞ்சுகிறது. மனதின் சிறிய தடுமாற்றம்கூட வாழ்வின் ஓட்டத்தில் திசைமாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதையே பாவண்ணன் எடுத்துரைக்கிறார்.

**முடிவுரை**

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றைய காலம் வரை மனித இனத்தின் ஓர் அங்கமாக இருக்கின்ற பெண்கள் பல்வேறு வழிகளில் இன்னல்களுக்கு உட்பட்டிருக்கின்றனர். சமூக கட்டமைப்பு ஆண்களை மையமிட்டு அமைக்கப்பட்டபோது ஆண்களால் பெண்கள் ஒடுக்குதலுக்கு ஆளானார்கள். அரசியல், கல்வி, பொருளாதாரம், சமயம் என எல்லாவற்றிலும் பெண்கள் ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே இருந்திருக்கின்றனர். தற்காலத்தில் அரசியல் ரீதியாக பல்வேறு உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அவற்றால் சமூக கட்டமைப்பில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. பொதுவான பார்வையில் ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே பெண்கள் இருக்கின்றனர். பாவண்ணன் சமூகத்தின் பல நிலைகளில் காணப்படும் பெண்கள் குறித்தும் பெண்கள் பற்றிய ஆண்களின் எண்ணங்களையும் தம் புனைவின் வழியாக எளிமையாக உணர்த்துகிறார். பெண்கள் தன் மனதிடம், அயராத உழைப்பு, சமூகத்தின் எள்ளல்களுக்கு செவி சாய்க்காமை ஆகியற்றைக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும். ஆண் – பெண் இருவரும் சமூகத்தின் அங்கத்தினர் என்பதை ஒவ்வொருவரும் உணரும் போதே சிறப்பான எதிர்காலம் கொண்ட நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**குறிப்புகள்**

[1] ஆனந்தி, ந. *பெருங்கதை மூலமும் உரையும்.* கௌரா புத்தக நிலையம்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[2] பாவண்ணன். *ஏவாளின் இரண்டாவது முடிவு.* தமிழினி, 342 டி.டி.கே.சாலை, சென்னை – 14.

[3] பாலையன், அ. ப. *நளவெண்பா மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம். ராயப்பேட்டை, சென்னை.

[4] பிரேமா, இரா, முனைவர். *பெண்ணியம்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தரமணி, சென்னை – 113, 1994.

[5] https://ta.wikipedia.org/s/7e6 நவம்பர் 25, 2024 அன்று அணுகப்பட்டது

[6] https://ta.wikipedia.org/s/mtn நவம்பர் 25, 2024 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.